**<u>IN THE COURT OF THE I-st ADDITIONAL DISTRICT COURT, RANIPET.</u>**
**<u>RANIPET DISTRICT.</u>**

**DEPOSITION OF WITNESS**

## <u>MCOP.No.08/2023 - PW-1</u>

| | |
|---|---|
| Name | திரு.ஹாஜி பாஷா |
| Father Name | அக்பர் பாஷா |
| Village /Area | |
| Taluk | |
| Occupation | |
| Age | |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 20.09.2024.

**முதல் விசாரணை**

நான் மனுவில் மனுதாரர். என்னுடைய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள சங்கதிகள் உண்மை என்று உறுதி கூறுகிறேன். முதல் தகவல் அறிக்கையின் நகல் ம.சா.ஆ.1. விபத்து பதிவேடு அறிக்கையின் நகல் ம.சா.ஆ.2. டிஸ்சார்ஜ் சம்மரியின் நகல் ம.சா.ஆ.3. பேருந்தின் பதிவு சான்று நகல் ம.சா.ஆ.4. பேருந்து ஓட்டுநரின் ஓட்டுநர் உரிமத்தின் நகல் ம.சா.ஆ.5. பேருந்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கையின் நகல் ம.சா.ஆ.6. சிஎம்சி மருத்துவமனை மற்றும் அப்போலோ கேஎச் மருத்துவமனையில் ரூ.1,87,809/- அளித்த பில்கள் ம.சா.ஆ.7 வரிசை ஆகும். மனுப்படி உத்தரவிட வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணை எதிர்மனுதாரர் தரப்பில் –**

விபத்தின் போது என்னுடைய வயது 45 ஆகும். விபத்து சமயம் நான் சைக்கிள் ஓட்டிக்கொண்டு சென்றேன். ராணிப்பேட்டை பிரிட்ஜ்

ஓரத்தில் விபத்து நடந்தது. விபத்து சம்மந்தமாக நான் தான் புகார் கொடுத்தேன். சைக்கிளை நான் தடுமாற்றமாக ஓட்டிச்சென்று, நான்தான் விபத்தை ஏற்படுத்தினேன் என்றால், சரியல்ல. என் அஜாக்கிரதையால்தான் விபத்து ஏற்பட்டது என்றாலும், எதிர்மனுதாரரின் பேருந்து ஓட்டுநரின் அஜாக்கிரதையால் விபத்து ஏற்படவில்லை என்றாலும், அது சரியல்ல. விபத்தில் ஏற்பட்ட காயங்கள் எனக்கு குணமாகி, நல்ல நிலையில் உள்ளேன் என்றால், சரியல்ல. விபத்து என் அஜாக்கிரதையால் ஏற்பட்டது என்றாலும், எதிர்மனுதாரர் எனக்கு இழப்பீடு அளிக்க தேவையில்லை என்றாலும், சரியல்ல.

**மறு விசாரணை –**

இல்லை.

S/d. M.Selvam, M.L.,
I Additional District Judge,
Ranipet.